2nd December 1970]

திரு. ஜி சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசுப் பேருந்துகளில் அதுவும் குறிப்பாக சென்னை மாநகரத்தில் ஓடுகின்ற பேருந்துகள் அதிகமான புகையைக் கக்கிக்கொண்டு செல்கின்றன. ஒரு இடத்தில் கார்த்திகைப் பொறி மாதிரி நெருப்பைக் கக்கிக்கொண்டு செல்வதை நான் பார்த்தேன். புகை கக்கிக்கொண்டு செல்வதால் பாதசாரிகளுக்கும், நெரிசல் உள்ள இடங்களில் உள்ளவர்களுக்கும் சுகாதாரக் கேட்டை உண்டுபண்ணும் என்பதை எண்ணி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மூலக் கேள்வி decentralization ஐப் பற்றியது. சில வேளைகளில் பஸ்கள் புகையைக் கக்கிக்கொண்டுதான் போகின்றன. அதைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கீழே புகை போகாமல் மேல் நோக்கிப் போவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக அரசாங்கத்தில் ஒரு பெரிய திட்டத்தைப் பரிசீலித்துக்கொண்டு வருகிறோம். அதற்கு சுமார் ரூ. 6 $\frac{1}{2}$ கோடி தேவையாக இருக்கிறது. இப்போது நேஷனலைசேஷன், ரிப்ளேஸ்மெண்ட், ஆக்மெண்டேஷன் ஆகியவற்றை அமுலாக்குவதற்கு ரூ. 6 $\frac{1}{2}$ கோடி வேண்டும். இப்போது நமது நிலைமை ரூ. 3 கோடிதான் அனுமதிக்கிறது. மேற்கொண்டு ரூ. 3$\frac{1}{2}$ கோடி கமர்ஷியல் பாங்கு மூலமாகவும், மத்திய அரசின் மூலமாகவும் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். நிச்சயமாக ரூ. 6 1/2 கோடி கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அது கிடைக்கும்போது, அதிகமான பஸ்களை விடுவதற்கு வசதி ஏற்படும். அப்போது புகையில்லாமல் போகும் வண்டிகள், ஓடும் நாம் மொத்தம் 2 ஆயிரம் பஸ்கள் வைத்திருக்கிறோம். சென்னை நகரத்தில் பத்து லட்சம் பேருக்கு மேல் பிரயாணம் செய்கிறார்கள். இது பெரிய பிரச்னை. புகை கக்குவது போன்ற சிறிய பிரச்னைகளை வைத்துக்கொண்டு பெரிதுபடுத்தக் கூடாது. நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. எஸ். ராகவானந்தம் : பஸ்களில் வரும் புகையை விட நிலக்கரியில் ஓடுகின்ற ரயில் இன்சினில் அதிகமாகப் புகை வருவதால், அப்படி வராமல் தடுக்க மத்திய அரசிற்கு மாநில அரசு கடிதம் எழுதுமா ?

மிஸ்டர் சேர்மன் : அது சென்ட்ரல் கவர்மெண்டைப் பொறுத்தது.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா: ரயிலில் புகை வருவதைப் பற்றி அதிகமாக எனக்குத் தெரியாது. நண்பர் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்திருக்கிறார். அவருக்கு அதுபற்றி நன்றாகத் தெரியும்.

Co-operative Irrigation Society, Agaram

*38. *Q.*—THIRU M. AIYASWAMY, THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

[2nd December 1970

(*a*) the total expenditure incurred on the scheme of sinking tube wells for the irrigation of 46 1/2 acres for the benefit of the small agriculturists of Agaram Village, Chingleput District ; and

(*b*) the total expenditure incurred on press advertisements at the time of inauguration ?

கூட்டுறவு நீரேற்றுச் சங்கம், அகரம்

திரு. எம். அய்யாசாமி, திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) செங்கற்பட்டு மாவட்டம் அகரம் கிராமத்தில் சில சிறு விவசாயிகளுக்குப் பயன்படத்தக்க வகையில் $46\frac{1}{2}$ ஏக்கர் நிலத்திற்கு குழாய் கிணறு அமைக்கும் திட்டத்திற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு ?

(இ) அதன் தொடக்க விழாவின்போது பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதற்காக ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) சிறு விவசாயிகள் இறவைப் பாசன கூட்டுறவு கழகத்திற்கு இரண்டு குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு ரூபாய் 23,000 அனுமதித்தது.

(இ) இன்னும் சில செய்தித் தாள்களிலிருந்து விவரங்கள் வர வேண்டி உள்ளதால் துவக்க விழாவின்போது ஏற்பட்ட மொதத விளம்பரச் செலவு இன்னும் கணக்கிடப்படவில்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : ரூ. 23,000 செலவழிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறார்கள். இந்தச் செலவு இரண்டு கிணறுகள் தோண்டுவதற்காக ஏற்பட்ட செலவா அல்லது அந்த நிகழ்ச்சியை நடத்துவதற்காக ஏற்பட்ட செலவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : 2 குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதற்காக அந்தக் கூட்டுறவு இறவை நீர்ப்பாசனக் கழகத்திற்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட தொகை தான் அது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : என்னுடைய கேள்வியில் அந்த நிகழ்ச்சியை நடத்துவதற்கான செலவு எவ்வளவு என்று தான் கேட்டிருக்கிறேன். எனவே அதற்கான செலவு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம் கேள்வியை தமிழில்தான் கேட்டிருக்கிறார்கள். குழாய்க் கிணறு அமைக்கும் திட்டத்திற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு என்றுதான் கேட்டிருக்கிறார்கள். குழாய்க் கிணறு அமைக்கும் திட்டத்திற்கு ஆன தொகைதான் ரூபாய் 23,000 என்று சொன்னேன். வேறு என்ன வேண்டும் ? கேட்டால், சொல்லுகிறேன்.

2nd December 1970]

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : அந்த விழாவின் போது விழாவிற்கான செலவு மட்டும் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : விழாவுக்கு மட்டும் ஆன செலவு பற்றி நயா பைசா வரையிட்ட விவரம் என்னிடம் இல்லை. இருந்தாலும் ஏறத்தாழ விழாச் செலவு ரூபாய் 5,000 இருக்கும்.

திரு. எம். அய்யாசாமி : இந்தக் குழாய்க் கிணறு அமைக்கும் திட்டத்திற்கு இறவை நீர்ப்பாசனக் கூட்டுறவு சங்க ஆரம்ப விழாவுக்காகப் பல பத்திரிகைகளில் கடைசி பக்கத்தில் முழுபக்கவிளம்பரம் போடப்பட்டிருந்தது. அப்படி எத்தனை பத்திரிகைகளில் விளம்பரம் போடப்பட்டது ? அதற்கு என்ன அவசியம் வந்தது ? இதன் மூலம் சர்க்காருக்கு எவ்வளவு செலவானது ? ஒரு கூட்டுறவு சூப்பர் மார்க்கெட் வைக்கிறோம் என்றால், அதிலே விற்பனைக்காக வாடிக்கைகாரர்கள் வர வேண்டும் என்று விளம்பரப்படுத்த வேண்டியது அவசியம். அதேபோல் போக்குவரத்துத் துறையில் ஒரு பஸ் ஸ்டாண்டு கட்டுகிறோம் என்றால், பிரயாணிகள் அங்கே வர வேண்டும் என்று விளம்பரம் செய்ய வேண்டியது அவசியம். எனவே இந்தக் குழாய்க் கிணறு அமைக்கும் நிகழ்ச்சிக்கு இவ்வளவு விளம்பரம் செய்ய வேண்டிய அவசியம் என்ன ? அதுவும் அத்தனை பத்திரிகைகளில் விளம்பரம் செய்ய வேண்டிய அவசியம் என்ன என்றுதான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அகரத்திலே துவக்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டம் 2 குழாய்க் கிணறுகளைப் போடுகிற திட்டம் மட்டுமல்ல. நமது தமிழகத்தில் சிறு விவசாயிகள் 80 சதவீதம் பேர் இருக்கிறார்கள். 1 ஏக்கர், 1½ ஏக்கர், 5 செண்டு, 10 செண்டு, ¾ ஏக்கர் என்ற நிலம் வைத்திருப்பவர்களை எல்லாம் ஒன்றாக்கி கூட்டுறவுச் சங்கத்தின் அடிப்படையில் கூட்டுறவு நீர்ப்பாசன இறவைக் கழகம் என்று துவக்கி, அதன் மூலம் அவர்கள் நிலங்கள் பயன் பெற வேண்டும், தண்ணீர் பெற வேண்டும் என்று இந்தத் திட்டத்தை ஏறத்தாழ 57 கோடி ரூபாய் செலவில் தீட்டியிருக்கிறோம். அதில் பெரும் பகுதியை சின்னஞ் சிறு விவசாயிகளுக்குச் செலவிட வேண்டும் என்றுதான் அகரத்தில் ஆரம்பித்து வைத்தோம். அது தொடங்கப்பட்ட இடமே தவிர வேறொன்றுமில்லை. எனவே தொடங்கப்பட்ட இந்த இடத்திற்கான செலவைப்பற்றி மட்டும் நீங்கள் பார்க்கக் கூடாது. இதற்கான முழுத் திட்டத்தையும் நீங்கள் பார்க்க வேண்டும். இந்தத் திட்டம் அகில இந்தியாவிலும் பாராட்டப்பட்ட திட்டம். வேறு பல மாநில அமைச்சர்கள் எல்லாம் இந்தத் திட்டத்தைப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். கடந்த 20, 25 வருட காலமாக சின்னஞ் சிறு விவசாயிகளுக்காக ஒரு சிறு உதவியையும் நில வள வங்கிகள் மூலமாகச் செய்ய முடியவில்லை. 50 கோடி ரூபாய் அளவுக்குப் பணம் செலவழித்திருந்தாலும் கூட, சின்னஞ் சிறு விவசாயிகளுக்கு உதவி செய்யப்படவில்லை. 1 ஏக்கர், ¾ ஏக்கர், ½ ஏக்கர் நிலம் உள்ள சின்னஞ் சிறு விவசாயிகளுக்கு எந்தப் பயனும் ஏற்படவில்லை. எனவே இந்தப் புதிய திட்டத்தை, மற்ற மாநிலங்களில் இல்லாத புதிய திட்டத்தை நாம் இங்கே தயாரித்திருக்கிறோம். 23,000 ரூபாய் செலவில் 2 கிணறுகள்

[2nd December 1970

தோண்டப்பட்டிருக்கின்றன. அதோடு மட்டும் முடிவதில்லை இந்தத் திட்டம். மொத்தமாக 59.5 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. அதற்குத் தான் விளம்பரம் தேவைப்பட்டது. விளம்பரம் செய்ததன் பலனாக இன்றைக்கு 1,000 விவசாயிகள் ஒன்றாகக் கூடி தங்களை சிறு விவசாயிகள் இறவை நீர்ப் பாசனக் கழகமாக ரிஜிஸ்டர் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும்கூட விளம்பரம் செய்வதற்குக் காரணம் இருக்கிறது. இதற்குச் செலவாகிற பணம் நமது வரிப் பணத்திலேயிருந்து கொடுக்கப்படுகிற பணம் அல்ல. ரிசர்வ் பேங்கில் ஏ.ஆர்.சி. என்று ஒரு பகுதி இருக்கிறது. அவர்கள் சிறு விவசாயிகளுக்கு பாசனக் கடன் உதவி செய்வது என்றால், 100க்கு 100 தொகையையும் தருகிறார்கள். 20 கோடி நாம் தருகிறோம் என்றால், 20 கோடி அவர்கள் தருகிறார்கள். எனவே தான் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம். விவசாயிகள், குறிப்பாக சின்னஞ் சிறு விவசாயிகள் எல்லாம் ஒன்றுகூடி இதன் பலனை அடைய வேண்டும் என்றால் அதற்கு விளம்பரம் இன்னும் தேவைப்படுகிறது. எந்த எந்தப் பத்திரிகைகளில் என்று கேட்டார்கள். இந்த விளம்பரத்தை இந்து பத்திரிகையில் செய்தோம். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் செய்தோம். மெயில் பத்திரிகையில் செய்தோம். இன்னும் தினமணி பத்திரிகையில் விளம்பரப்படுத்தினோம். தினத்தந்தியில் செய்தோம். மாலை முரசு பத்திரிகையில் செய்தோம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : இது இந்தியாவிலேயே புதிய திட்டம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருச்சி ஜில்லாவில் புகளூரில் ஒரு சங்கம் அமைக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றனவே, அது எந்த அமைப்பில் எந்த மாநிலத்தில் செயல்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : திருச்சி ஜில்லாவில் 64,000 ரூபாய் செலவில் புகளூரில் ஒரு நீர் ஏற்று பாசனக் கூட்டுறவுக் கழகம் ஒன்று திட்டமிட்டிருக்கிறோம். அது வேலை தொடங்கவில்லை. அதற்கும் இதற்கும் ஒரு பெரிய வேற்றுமை இருக்கிறது. என்னவென்றால் அது எல்லா விவசாயிகளையும் சேர்த்த ஒரு அமைப்பாகும். 10 ஏக்கர், 15 ஏக்கர் உள்ள பெரிய விவசாயிகளானாலும் சரி, அவர்களுக்கும் அதன் மூலம் தண்ணீர் தருகிறோம். அப்படிப்பட்ட திட்டம் அது. அதற்கு ரிசர்வ் பேங்க் 75 சதவிகிதம் பணம் தருகிறது. 25 சதவிகிதம் பணத்தைத்தான் நம் அரசாங்கம் கொடுக்கிறது. ஆனால் நாம் சொல்லுகிற திட்டம் 5 ஏக்கர் நிலத்திற்கு மேற்பட்டவர்களுக்கு அல்ல. 100க்கு 80 பங்கு இருக்கும் சின்னஞ் சிறு விவசாயிகளுக்காக மட்டும் தனியாகத் தீட்டப்பட்ட திட்டம். புகளூர் திட்டம் வேறு. இது வேறு.

தலைவர் அவர்களே, அவர்கள் கேட்டதற்கும் விவரம் சொல்லி முடித்து விடுகிறேன். அவர்கள் எந்தப் பத்திரிகைகள் என்று குறிப்பிட்டுக் கேட்டதற்குக் காரணம் இருக்கிறது. தினத் தந்தி, மாலை முரசு பத்திரிகைகளுக்கு எவ்வளவு பணம் கொடுத்தீர்கள் என்று கேட்கத்தான் இப்படிக் கேட்டார்கள். அவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து பணம் கொடுக்கவில்லை. அவர்கள் இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு 7,695 ரூபாய்,

தினமணி பத்திரிகைக்கு ரூ. 3,070. தினத் தந்தி, மாலை முரசு பத்திரிகைகளைப் பொறுத்தவரையில், ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் கொடுக்கப்பட்டது. அவர்கள் கூட்டுறவுத் துறையிலிருந்து ஏதாவது விளம்பரம் செய்வதாக இருந்தால், அவர்கள் மக்களின் நன்மையைக் கருதி, அந்த விளம்பரத்தைச் செய்ய வேண்டுமே தவிர, வேறு எந்த விதமான பிரதி பலனையும் ஒரு நயா பைசா கூட கேட்கக் கூடாது என்ற திட்டத்தின் அடிப்படையில்தான் முழுப்பக்க விளம்பரம் செய்யப்பட்டது என்று சொல்லிக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. PRIVILEGE MOTION

THIRU G. VASANTHA PAI : I want to bring to the attention of the Hon. Chairman that I intended to move a motion of breach of privilege, with the consent of the Chair, after question-hour. When I met the Hon. Chairman at 3-50 p.m., he said that I could move it tomorrow. In the meantime, I have got a letter that you have withheld your consent. May I have an opportunity to convince the Chairman so that I may be given permission to move the motion ?

MR. CHAIRMAN : No.

III. ANNOUNCEMENT *re* Message from the Assembly

MR. CHAIRMAN : I have received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970(L.A. Bill No. 45 of 1970) and the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 (L.A. Bill No. 43 of 1970), as passed by the Legislative Assembly, and signed by him for the concurrence of the Council.

IV. CALLING ATTENTION TO THE CONSTRUCTION OF DAMS BY THE GOVERNMENT OF MYSORE ACROSS THE RIVER CAUVERY

*THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I call the attention of the Hon. the Minister for Public Works to a matter of urgent public importance, namely, the construction of dams by the Government of Mysore, across the river Cauvery and the consequent damage that may be done to the rice bowl of the State, Thanjavur District.